முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.264/2023

LW-5, (PW -3)

| பெயர்; | சண்முகசுந்தரம் | மதம் | |
|---|---|---|---|
| த.பெ. | லட்சுமணன் | தொழில் | |
| ஊர் | அத்தியூர்திருவாதி | வயது | 55 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16/03/2026 |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் அத்தியூர்திருவாதி கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். கடந்த 12 வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை நான் எங்கள் ஊர் பக்கத்தில் உள்ள விழுப்புரம் – உளுந்தூர்பேட்டை நெடுஞ்சாலையில் உள்ள பிடாகத்திற்கு சென்றேன் அப்போது போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள் அது தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ4**. போலிசார் என்னை விசாரிககவில்லை

சாட்சி பிறழ்சாடசியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

13.1.2013 அன்று காலை சுமார் 8.30 மணிக்கு நானும் குகன் என்பவரும் குச்சிப்பாளையம் சென்று கொண்டிருந்தபோது குச்சிப்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில் விழுப்புரம் தாலுக்க போலிசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும அதில் நாங்கள் சாட்சியாக இருந்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-. A.Tamilselvan, M.L.,

Principal Subordinate Judge,

Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.264/2023

LW-3, (PW -2)

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | நாராயணன் | மதம் | |
| த.பெ. | கண்ணப்பன் | தொழில் | |
| ஊர் | பிடாகம் | வயது | 56 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16/03/2026 |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் பிடாகம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 13 வருடத்திற்கு முன்பு இரவு 7 மணியளவில் எனது மருமகன் முருகன் எங்கள் வீட்டிலிருந்து குச்சிப்பாளையத்திற்கு பைக்கில் சென்றபோது அடையாளம் தெரியாத 2 நபர்கள் கத்தியை காட்டி மிரட்டி செயின் மற்றும் குருமாத்து ஆகியவைகளை பிடுங்கிச சென்றதாக எனது மருமகன் என்னிடம் கூறினார். நான் அங்கு செல்வதற்குள் மேற்படி நபர்கள் சென்றுவிட்டார்கள். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று தகவல் தெரிவித்தேன். போலிசார் என்னை விசாரித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொனனார்கள் இது சம்மந்தமாக மறுநாள் எனது மருமகன் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் .போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய தேதி எனக்கு ஞாபகம் இருக்கா என்றால் தேதி ஞாபகம் இல்லை. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எப்படி தகவல் கிடைத்தது என்றால் எனது மருமகன் சொன்னார். எனது மருமகன் சொல்லும் வரையில் சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து எனக்கு தகவல் தெரிந்தது என்றால் சுமார் கால் மணி நேரம் கழித்து தெரிந்தது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. பொய்யாக சாட்சியம் அளிகிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-. A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,
Villupuram